# ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து விலக்குப் பெறும் கோரிக்கை

**ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து விலக்குப் பெறுவதற்கான கோரிக்கை**

Policy/Program Memorandum No. 164 (கொள்கை/திட்டம் பற்றிய குறிப்பேடு இல 164) ஊடாக, தொலைதூரக் கல்விக்கான தேவைப்பாடுகளை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான குறைந்தபட்ச தேவைகளிலிருந்து (கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்) விலக்குக் கோரி விண்ணப்பிப்பதற்கு, தொலைதூரக் கற்றலில் ஈடுபடும் மாணவர்களை அனுமதிக்கும் செயல்முறை ஒன்றைப் பாடசாலைச் சபைகள் உருவாக்க வேண்டுமென்பது கட்டாயமானதொரு எதிர்பார்ப்பாகும் என்பது இந்தத் தேவைப்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து (கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்) விலக்குப் பெறுவதற்கான தனிப்பட்ட கோரிக்கைகள், இணையத்திலுள்ள படிவத்தின் ஊடாக அல்லது அச்சடிக்கப்பட்ட பிரதி ஒன்றைப் பிள்ளை செல்லும் பாடசாலைக்கு சமர்ப்பிப்பதன் மூலம் பாடசாலை மேற்பார்வையாளருக்கு (அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட  பிரதிநிதிகளுக்கு) அனுப்பப்படும். மேற்பார்வையாளர்கள் (அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்) பின்னர் அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலிப்பார்கள், தனிப்பட்ட விலக்கு கோரிக்கைகளைப் பற்றி முடிவெடுப்பார்கள், அத்துடன் விலக்குக் கோரிக்கைகள் யாவற்றுக்கும் எழுத்துமூலமாகப் பதிலளிப்பார்கள். அங்கீகரிக்கப்பட்ட விலக்குகள் ஒன்ராறியோ மாணவர் பதிவேட்டில் (Ontario Student Record) பேணப்படும். முன்பே அங்கீகரிக்கப்பட்ட விலக்குக் கோரிக்கைகளை நீட்டிப்பதற்கு அல்லது 2020/2021 பாடசாலை ஆண்டின் இறுதி வரை நீட்டிக்கக்கூடிய காலாவதி திகதி ஒன்றைத் தெரிவுசெய்வதற்கு உரிய விருப்பத்தெரிவுகள் விண்ணப்பதாரர்களுக்குத் தற்போது கிடைக்கின்றன.

**ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான வகுப்புரீதியான எதிர்பார்ப்புகள்**

| **பிரிவு** | **மாணவர்களின் தரங்கள்** | **ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) தினசரிக் கற்றலுக்கான குறைந்தபட்ச நேர அளவு*** |
|---|---|---|
| ஆரம்பநிலை | பாலர்வகுப்பு | 180 நிமிடங்கள் |
| | வகுப்புகள் 1 - 3 | 225 நிமிடங்கள் |
| | வகுப்புகள் 4 - 8 | 225 நிமிடங்கள் |
| இரண்டாம்நிலை | வகுப்புகள் 9 - 12 | ஒவ்வொரு 75-நிமிட வகுப்புக்கும்** அதிகபட்சம் 60 நிமிடங்கள் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட முழுக் கற்கைநெறிக்கும் தினசரி 225 நிமிடங்கள் |

* இது ஏககாலத்தில் நிகழாத (தனிப்பட்ட) கற்றலுடன் நிகழவேண்டிய மேலதிகமான கற்றல் நேரம் ஆகும்.

** ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) இந்தக் கற்றல் நேரம், 75 நிமிடங்கள் அல்லாத ஒவ்வொரு பாடத்துக்கும் இதன் விகிதத்துக்கு ஏற்பச் சரிசெய்யப்பட வேண்டும்.

பெற்றோர்/பாதுகாவலர் அல்லது 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் அல்லது 16 அல்லது 17 வயதுடைய, ஆனால் பெற்றோரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய மாணவர்கள், ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) இந்தக் கற்றலிருந்து விலக்குப் பெறுவதற்கான கோரிக்கையைக் கோரமுடியும். Policy/Program Memorandum No. 164 (கொள்கை/திட்டம் பற்றிய குறிப்பேடு இல 164) க்கு இணங்க, TDSB மெய்நிகர் கற்றல் தெரிவுக்குப் பதிவுசெய்திருக்கும் (உ+ம்., TDSB மெய்நிகர் பாடசாலை, மெய்நிகர் வழியில் கற்கும் தெரிவுள்ள இரண்டாம்நிலைப் பாடசாலை, Learning Network Virtual Learning Hub (மெய்நிகர் வழியில் கற்கும் வயது வந்த) மற்றும் பாடசாலையில் நேரில் கற்கும் மாற்றப்பட்ட மாதிரி ஒன்றில் பதிவுசெய்திருக்கும் இரண்டாம்நிலைப் பாடசாலை) மாணவர்களுக்கு இந்தப் படிவம் பொருந்தும். பாடசாலையில் நேரில் கற்பதைத் தெரிவுசெய்திருக்கும் ஆரம்பநிலை மாணவர்களுக்கோ அல்லது வீட்டில்கற்பதைத் தெரிவுசெய்த மாணவர்களுக்கோ இந்த விதிவிலக்குச் செயல்முறை பொருந்தமாட்டாது. விலக்கு ஒன்றைக் கோரும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பாடசாலை நேரத்தில் இணையத்தில் நிகழும் ஏககாலக் (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றல் பகுதிக்கு மட்டுமே, மாற்றப்பட்ட பாடசாலை நாள் மாதிரியில் பதிவுசெய்திருக்கும் இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கான ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து முழுமையான விலக்குப் பொருந்தும். மாற்றப்பட்ட பாடசாலை நாள் மாதிரிக் கற்பித்தலில் நேரடியாகக் கற்கும் பகுதிக்கு இந்த விலக்குப் பொருந்தமாட்டாது. நேரில் கற்கும் இந்த மாதிரியின் பகுதிகளுக்கு இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்கள் சமூகமளிப்பது கட்டாயமாகும்.

கல்விக்கான அர்த்தமுள்ள அணுகலை ஆதரிப்பதற்காக, விலக்குப் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் கற்றலுக்கான மாற்று அணுகுமுறைகள் வழங்கப்படும். விலக்குப் பெற்ற மாணவர்களுக்குத் தினமும் 300 நிமிடக் கற்பித்தல் இருக்கும்வகையில் தினசரி அட்டவணை அல்லது நேரசூசிகை வழங்கப்படும்.

**விலக்குப் பெற்ற மாணவர்களுக்கான எதிர்பார்ப்புகள்**

- தினசரி அட்டவணை: விலக்குப் பெற்ற மாணவர்கள் அனைவரும், 300 நிமிடக் கற்பித்தல் இருக்கும்வகையில் அவர்களின் ஆசிரியரால் வழங்கப்பட்ட தினசரி அட்டவணை அல்லது நேரசூசிகையை ஒன்றைப் பின்பற்ற வேண்டும். Brightspace, Google Classroom அல்லது விசேட கல்விக்கான தேவைகள், மருத்துவரீதியான காரணங்கள் மற்றும் புலன்உணர்ச்சி, பார்வை, புலப்படும் மற்றும் கண்ணுக்குத் தெரியாத வலுவிழப்புகள், விருத்திரீதியான காரணங்கள், மனநலம், மனவடு, மதம் /கோட்பாடு, குடும்ப அந்தஸ்சு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட இன்னொரு ஏற்றுக்கொண்ட முறைக்குள் வகுப்பாசிரியரால் வழங்கப்பட்ட பணிகளை மாணவர்கள் சுயாதீனமாக அணுகவும், பூர்த்திசெய்யவும் வேண்டியதேவை இதில் இருக்கும். குறிப்பிட்ட படிப்புத் திட்டம் அல்லது கற்கைநெறி ஒன்றில் சேரும் மாணவர்களுக்கு ஒரேமாதிரியான தினசரி அட்டவணையை அல்லது நேரசூசிகையை ஆசிரியர்கள் வழங்குகின்ற அதேவேளையில், ஏககாலத்தில் நிகழாத (சுயாதீனமான) கற்றலில் ஈடுபடும் அளவை அதற்கேற்ப அதிகரிக்க வேண்டிய பொறுப்பு விலக்கு ஒன்றைத் தெரிவுசெய்த மாணவர்களுக்கு இருக்கும்.
- கற்பதற்கான பொருட்கள்: ஒன்ராறியோவின் முழுமையான பாடத்திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும், அத்துடன் மாணவர்களுக்கென ஆசிரியர் வகுத்துள்ள எதிர்பார்ப்புகள் பின்பற்றப்படும். இந்த பொருட்கள் Brightspace கற்றல் மேலாண்மை அமைப்பு, Google Classroom அல்லது தனிப்பட்ட மாணவரின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றொரு முறை (உ+ம்., தொலைபேசி மூலமான கலந்துரையாடல், மின்னஞ்சல்கள்) மூலம் வழங்கப்படும்.
- தினசரி வருகை: TDSB ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை பாடசாலைகளுக்குச் சமூகமளித்தல் தொடர்பான நடைமுறைகளுக்கு ஏற்ப, ஆரம்பநிலைக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறையும், இரண்டாம்நிலைக்கு ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாகவும் வருகைப்பதிவு எடுக்கப்படும். ஏககாலத்தில் நிகழும் (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்ச தேவைகளிலிருந்து பகுதியான மற்றும் முழுமையான விலக்குகள் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான சமூகமளித்தல் தொடர்பான நடைமுறைகள் பற்றிய மேலதிக விபரங்களைக் கீழே பாருங்கள். ஏககாலத்தில் நிகழும் (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்ச தேவைகளிலிருந்து முழுமையான விலக்குகள் வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில், ஆசிரியர்கள் அவர்களின் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்தி, மாணவர்கள் மற்றும் அவர்களின்

பெற்றோருடன்/பெற்றோர்களுடன் அல்லது பாதுகாவலரருடன்/பாதுகாவலர்களுடன் (பொருந்துமாயின்) தொடர்ந்து தொடர்புகளைப் பேணுவார்கள்.

    - பகுதி விலக்குகள்: TDSB ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலைநிலை பாடசாலைகளுக்குச் சமூகமளித்தல் தொடர்பான நடைமுறைகளுக்கு ஏற்ப, ஆரம்பநிலைக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறையும், இரண்டாம்நிலைக்கு ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாகவும் வருகைப்பதிவு எடுக்கப்படும்.
    - முழு விலக்குகள்: செவ்வாய்க் கிழமைகளில் (திங்கள் முதல் செவ்வாய் வரை) மற்றும் வெள்ளிக்கிழமைகளில் (புதன்கிழமை முதல் வெள்ளி வரை) வாரத்திற்கு இரண்டு முறை வருகை பதிவு செய்யப்படும். முழு விலக்கு பெற்ற மாணவர்கள், பின்வரும் வழிகளில் ஏதாவது ஒரு வழியில் அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் அவர்களின் ஆசிரியருடன் அவர்கள் தொடர்புபட்டிருந்தால் அவர்கள் சமூகமளித்தததாகப் பதியப்படக்கூடும்: வாரத்திற்கு ஒரு முறையாவது பாடவேலையைச் சமர்ப்பித்தல், தொலைபேசி மூலமான கலந்துரையாடல்கள் அல்லது Brightspace, Google Classroom, மின்னஞ்சல்கள் போன்ற ஏனைய தொடர்பாடல்கள் .

- <u>தொடர் மதிப்பீடு, முறைசார் மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்</u>: Growing Success கொள்கையில் வரையறுக்கப்பட்டிருக்கும்: ஒன்ராறியோப் பாடசாலைகளில் தொடர் மதிப்பீடு, முறைசார் மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் - 2010) ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்ச தேவைகளிலிருந்து விலக்குக்கு அங்கீகாரம் பெற்றிருக்கும் TDSB மாணவர்கள் அனைவருக்கும் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படும். அதேவேளையில், Growing Success: 1 முதல் 8 ஆம் வகுப்பு வரைக்கான கணிதப் பிற்சேர்க்கை, 1 முதல் 8 ஆம் வகுப்புக் கணிதத்திற்கான மாகாணத் தேர்ச்சி அறிக்கையைப் பூர்த்திசெய்வதற்கான வழிமுறைகளைப் பிரதியிடுகிறது. கற்கைநெறி ஒவ்வொன்றினதும் தொடக்கத்தில் மதிப்பீட்டுக்கான எதிர்பார்ப்புகளை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தெளிவாக விபரிப்பார்கள். தேவைக்கேற்ப எண்ணிமத் தொலைநுட்பம் அல்லாத பிரதிகளாக இது கிடைக்கும், அத்துடன் Brightspace அல்லது Google Classroomக்குள் (பொருந்தும் இடத்தில்) இருக்கும் தொடர்மதிப்பீடு மற்றும் முறைசார் மதிப்பீட்டுக் கோப்புக்களுக்குள் இது சேர்க்கப்படும். ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளை இரண்டாம் மொழியாகக் கற்பவர்கள் மற்றும் தனிப்பட்ட கல்வித் திட்டத்தை (IEP) கொண்ட சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் உள்ளடங்கலான அனைத்து மாணவர்களுக்கும் விடயம் மற்றும் கற்பித்தல் முறையில் மாறுபட்ட ஆதரவுகளை தொடர்ந்தும் ஆசிரியர்கள் வழங்குவார்கள். கற்கை நெறிகளை அல்லது பதிவுசெய்த பாடங்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்குத்

தேவையான ஒப்படைகள் மற்றும் மதிப்பீடுகளை மாணவர்கள் Brightspace அல்லது Google Classroom இல் பூர்த்திசெய்து சமர்ப்பிப்பார்கள்.

**ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான விலக்குகள்**

பாடசாலைச் சமூகங்களின் மாறுபட்ட தேவைகளை நிவர்த்திசெய்வதில் நெகிழ்வுத்தன்மை மற்றும் TDSB பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்களின் ஒட்டுமொத்த மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு அதிக ஆதரவை அளித்தல் என்பனவே விலக்குகளை வழங்குவதன் மூலம் மாணவர்களுக்கு இடமளிப்பதன் நோக்கமாக இருக்கிறது. விலக்குப் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும், ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான விலக்கு சற்று நெகிழ்வுத்தன்மையை வழங்குகின்ற அதேநேரத்தில், ஏககாலத்தில் நிகழாத (சுயாதீனமான) தினசரி கற்றலுக்கான நேர அளவை அதிகரிக்கவேண்டிய தேவையையும் அது ஏற்படுத்துகிறது. ஆசிரியர்களின் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்துக்கு ஏற்ப, முன்பே பதிவுசெய்த வீடியோப் பாடங்களைப் பார்ப்பது, ஒதுக்கப்பட்ட பணிகளைப் பூர்த்திசெய்வது அல்லது இணையத்தில் நிகழும் கலந்துரையாடல்களில் பங்களிப்புச் செய்வது போன்றவற்றை இது உள்ளடக்கலாம். ஏககாலத்தில் நிகழாத (சுயாதீனமான) கற்றலுக்கான அணுகல்கள் சில சந்தர்ப்பங்களில் மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசி அழைப்புகள் மூலம் வழங்கப்படலாம்.

வகுப்பு ஆசிரியருடனான தொடர்பை மாணவர் பேணுவதை உறுதிசெய்தல் மற்றும் அறிவுறுத்தப்பட்ட மற்றும் மதிப்பீட்டுக்காக ஒதுக்கப்பட்ட பணிகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவை ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலுக்கான விலக்கின் அத்தியாவசியமான பகுதிகளாக உள்ளன. கல்விச் சட்டத்தின் கீழ், கட்டாயமாகப் பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயதுள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிப்பது அவசியமாகும். மாணவர்களின் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக, TDSB Policy P085 - Student Attendance and Safe Arrival (கொள்கை P085 – மாணவர் சமூகமளித்தல் மற்றும் பாதுகாப்பான வருகை) மற்றும் கல்வி அமைச்சின் Enrolment Register Instructions for Elementary and Secondary Schools (ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலைப் பாடசாலைகளுக்குச் சேர்த்துக்கொள்ளும் பதிவேடுகளுக்கான அறிவுறுத்தல்கள்) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கல்விச் சட்டம் மற்றும் கல்வி அமைச்சின் தொடர்பான கொள்கைகளுக்கேற்ப மாணவரின் வருகையின்மை கையாளப்படும். எனவே, வருகைப்பதிவேட்டில், ஆதரிக்கும் ஆவணங்கள் எதுவுமின்றி 15 பாடசாலை நாட்களுக்குத் தொடர்ச்சியான சமூகமளியாமை இருந்தால், அந்த மாணவர் பாடசாலையிலிருந்து நீக்கப்படலாம்.

கட்டாய வருகையைப் பூர்த்திசெய்யாமலிருத்தல், பணி நிறைவு மற்றும் மதிப்பீட்டுக்கான எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்வதில் ஒழுங்கில்லாமலிருத்தல் என்பன ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள)

கற்றலின் குறைந்தபட்சத் தேவைகளுக்கு முரணானவையாக இருக்கும், அத்துடன் TDSB Homeschooling Policy (வீட்டில்கற்பித்தல் கொள்கை) இல் வரையறுக்கப்பட்டிருக்கும் வீட்டில்கற்பிக்கும் நோக்கத்துடன் அது ஒத்திருக்கிறது. பிள்ளை ஒருவரை வீட்டில் வைத்துக் கற்பிக்க விரும்பும் பெற்றோர் / பாதுகாவலர்கள் Notice of Intent to Home School (Form 553A) (வீட்டில் கற்பித்தல் நோக்கத்தை அறிவிக்கும் படிவம் 553 A) ஒன்றை அவர்களின் Family of Schools மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**முழுமையான விலக்குப் பெற்ற மாணவர்கள் மற்றும் கற்றலுக்கான பொருள்களை அணுகல்**

ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து பகுதி அல்லது முழு விலக்கு வழங்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் Brightspace அல்லது Google Classroomஇல் அவர்கள் பதிவுசெய்திருக்கும் தரம்/பாடநெறி/பாடநெறிகள் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் மதிப்பீட்டு விடயங்களுக்குச் சமத்துவமான அணுகல் தொடர்ந்தும் வழங்கப்படும். தொடர்மதிப்பீடு, மற்றும் முறைசார் மதிப்பீடு நோக்கங்களுக்காக ஆசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டிய கற்றல் செயல்பாடுகள் மற்றும் ஏககாலமற்ற (சுயாதீனமான) கற்றலுக்கான வாய்ப்புகளுக்கான பயிற்சிகள் இணையத்தில் சேர்க்கப்படும். மாணவர்கள் அவர்களின் பாடநெறி தொடர்பான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு உதவிசெய்யும் முக்கியமானதொரு முன்நிபந்தனையாக இது இருக்கும். ஏககாலத்தில் நிகழ்கின்ற (நேரடியான, ஊடாட்டமுள்ள) கற்றலின் குறைந்தபட்சத் தேவைகளிலிருந்து விலக்கு வழங்கப்பட்ட அனைத்து மாணவர்களும், அவர்களுடைய ஆசிரியர்களுடனான தொடர்பைப் பேணுவதற்கும் ஒதுக்கப்பட்ட பணிகள் மற்றும் மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்வது மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பான ஒழுங்குகளை அவர்களுடைய ஆசிரியர்களுடன் மேற்கொள்வதற்கும் பொறுப்பானவர்களாக இருப்பார்கள்.

**விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி**

விலக்குகளுக்கான கோரிக்கைகள், ஒவ்வொரு தவணையும் ஆரம்பமாகும் திகதியிலிருந்து ஒரு வார கால முடிவுக்குள், பி.ப 4 மணியளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆரம்பநிலை மாணவர்களுக்கான விண்ணப்பக் கடைசித் திகதிகள்: ஒக்ரோபர் 20, நவம்பர் 30, மற்றும் பெப்ரவரி 23.

இரண்டாம்நிலை மாணவர்களுக்கான விண்ணப்பக் கடைசித் திகதிகள்: ஒக்ரோபர் 20, நவம்பர் 30, பெப்ரவரி 15 மற்றும் ஏப்ரல் 30.

புதுப்பித்தல்கள்/நீட்டிப்புக்கள்: விலக்குக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த உங்களின் கோரிக்கை காலாவதி ஆகிவிட்டது அல்லது அதன் காலாவதி திகதியை அது நெருங்குகிறது எனில், முடிந்தளவு விரைவில் மேலே இணைக்கப்பட்டிருக்கும் அதே இணையப் படிவம் ஊடாக விலக்குக்கான புதிய கோரிக்கையைச் சமர்ப்பியுங்கள்.